பாரதியின் சக்திப் பாடல்கள்

தொகுப்பாசிரியர்
சொக்கன்

திருவாட்டி
உமையவல்லி
சேதுராசா
நினைவு வெளியீடு
1982

தெணியான்
01.02.

பாரதியின் சக்திப் பாடல்கள்

தொகுப்பாசிரியர் :
சொக்கன்

திருவாட்டி
உமையவல்லி
சேதுராசா
நினைவு வெளியீடு
1982

முகவுரை

தாய்வழிச் சமூகம்

ஆதிகாலத்தில் உலகில் இருவகைச் சமூக அமைப்புக்கள் காணப்பட்டன. ஒன்று தாய்வழிச் சமூகம், மற்றது தந்தைவழிச் சமூகம். குடும்பத் தலைவியாய்ப் பெண் முதன்மை பெற்ற சமூகங்களிலே குலமுறைமை, தாயைக்கொண்டே அமைந்தது. குடும்ப முதல்வனாய் ஆண் தலைமை பெற்ற சமூகங்களிலே குலமரபு தந்தையைக் கொண்டே அமையலாயிற்று. ஆண் மகன் வேட்டை மேற்கொண்டு வெளியிற் சென்ற காலங்களிலே, வீட்டிலிருந்தவண்ணம் குடும்ப நிருவாகத்தையும் ஓய்வுநேரப் பொழுதுபோக்காய் உழவுத் தொழிலையும் கைக்கொண்ட பெண்ணானவள் இல்லத் தலைவியானது இயல்பே. மந்தை மேய்த்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்ட ஆண் மகன் தான் வளர்த்த மந்தையைத் தனது சொத்தாய் உரிமை பாராட்டியது போலவே, தன் மனைவியையும் தன் உடைமையெனக் கருதி அவள்மீது ஆதிக்கம் செலுத்தலானான். இவ்வாறு இருவழிச் சமூக அமைப்புக்கள் தோன்றி நீண்டகாலம் நிலைபெற்றன.

தாய்வழிச் சமூகமும் தாய்த்தெய்வ வழிபாடும்

மனிதன், உருவமற்ற இறைவனுக்கு உருவம் அமைத்து வழிபடத் தொடங்கிய காலத்தில் அதனைத் தனது சாயையில் உருவாக்கியது முற்றிலும் இயற்கையே. தந்தைவழிச் சமூகத்தினர் தெய்வ வடிவங்களை அமைக்கும்பொழுது அவற்றைப் பெரும்பாலும் ஆண்களாகவே உருவகப் படுத்தினர். பெண் முதன்மை பெற்ற சமூகங்களிலே தலைமைத் தெய்வம் பெண்ணாகவே உருவகப்படுத்தப்பட்டது. இதனைத் தாய்த் தெய்வம் என்னும் வழக்கமும் ஏற்பட்டது. சிந்து வெளி நாகரிக காலத்திலே அங்கு வாழ்ந்த மக்கள் தாய்த்தெய்வ வழிபாட்டினைக் கொண்டிருந்தமையை இதற்கு எடுத்துக்காட்டாய்க் கொள்ளலாம்.

"இசிசிஸ் (பெண்தெய்வம்) வழிபாடு நிலவிய எகிப்திலும் உரோமாபுரியிலும் ஆண்களிலும் பெண்களுக்குச் சிறப்பும் சொத்துரிமையும் நிலவின" எனவும் சின்னுசியாவில் லிசியா என்ற பிரதேசத்தில் சிபில் என்ற பெண் தெய்வ வழிபாடு அமைந்தது எனவும் பிறேசர் (Frazer) என்னும் ஆய்வாளர் குறிப்பர். இவர் கூறியவற்றை ஒப்பு நோக்கிய சந்தா என்பவர் கூறுவதாவது : "சாக்த வழிபாடு அதாவது தேவி, அத்யசக்தி (அதிதி), பிரகிருதி, ஜகதாம்பாள் முதலிய சொற்களால் குறிக்கப்படும் நம்பிக்கையானது தாய்வழிச் சமூகத்திலேயே தோன்றியது."

திராவிடரின் பழைமையான வழிபாட்டு முறைமை:

திராவிட இனத்தினரின் பழைய வழிபாட்டு முறைமை பெண் தெய்வத்தையே அடிப்படையாகக் கொண்டது. திராவிடர் வாழ்கின்ற பகுதிகளிலெல்லாம் அன்னை வழிபாடு உண்டு நிலமும் நிலத்தின் வழிவந்த இயற்கையும் பழந் திராவிடரின் தெய்வக் கோட்பாட்டுக்கு அடிப்படையாயின. பழைய தமிழிலக்கியங்களில் இதற்குப் போதிய சான்றுகள் காணப்படுகின்றன. ஆலமர் செல்வி, முதியோள், அன்னை, காடுகிழாள், பழையோள் முதலான பெயர்கள் தமிழகத்திலே தாய்த் தெய்வ வழிபாடு நிலவிய பழைமையையும் முதன்மையையும் புலப்படுத்துகின்றன. கொற்றவை பாலை நிலத்தெய்வமாகக் கொள்ளப்பட்டாள்.

சக்தி வழிபாட்டின் வியாபகம்

சுருங்கச் சொன்னல், தாய்த் தெய்வமாகிய சக்தி வழிபாடு உலகளாவிய ஒன்றென்பதும். அது திராவிட ஆரிய வழிபாட்டு மரபுகளில் மிகப் பழங்காலத்திலேயே இடம் பெற்றதென்பதும் குறிப்பிடத்தக்க உண்மைகளாகும்.

இன்று வங்காளத்திலே பிரசித்திபெற்று விளங்கும் சாக்தமதம் அனைத்திந்தியாவிலும் சக்தி வணக்கமாகப் பரந்து காட்சி தருகின்றது சைவசித்தாந்த நெறியிலே இறைவனின் பின்னமற்ற பகுதியாகப் பராசக்தி விளங்குவது நாம் அறிந்ததே இந்துக்கள் அனைவருமே நவராத்திரி விழாவின் வாயிலாகச் சக்தி வணக்கத்தினை நிகழ்த்தி வருவது கண்கூடு.

சக்தி தத்துவம்

சக்தி பற்றிய தத்துவம் மிகவும் ஆழமானது, அகன்றது, அர்த்தபுஷ்டியானது. சக்தி சகல அண்டங்களிலும் எல்லாச் சக்திகளுக்கும் காரணமாகவும் ஆதாரமாகவும் உள்ளது. இதனைப் பராசக்தி, ஆதிசக்தி என்ற பெயர்களால் அழைப்பர். வேதங்கள் உபநிடதங்கள் எங்கணும் சக்தியின் பெருமை பேசப்படுவதாய் அறிஞர் உரைப்பர். 'அன்னை பராசக்தி' என்ற தமது நூலிலே சக்தி தத்துவம் என்ற பகுதியிலே திரு எஸ். நடராஜன் (நஜன்) கூறுவது பின்வருமாறு:

''பிரும்மமே தேவர்களின் பொருட்டுத் தேவாசுர யுத்தத்தில் ஜெயத்தை அடைந்தது. ஆனால் தேவர்கள் வெற்றி பெற்றதாகப் பெருமை கொண்டனர். அவர்களுக்கு யாதொரு சக்தியும் கிடையாதென்றும், எல்லாம் தன்னால் தான் உண்டாகிறதென்றும் பிரும்மம், அக்னி, வாயு, இந்திரன் இவர்களுக்குக் காட்டி மறைந்தது. அந்தப் பிருமம்மே ஜகந்மாதாவான பராசக்தி.''

''எல்லா வழிபாட்டுக்கும் ஆதாரமாக விளங்குவது சக்தி வழிபாடு. உலகத்தை இயங்கச் செய்வதெல்லாம் இந்தச் சக்தியே. இதைச் சிவவாக்கியர் 'சக்தியின் அருள் இன்றேல் ஜகந்தனில் அசைவே இல்லை' என்கிறார். சக்தியும் சிவனும் சேர்ந்தால்தான் மதிப்பு. மனித சரீரத்தில் ரத்தமும் சதையும் போன்றவள் அம்பிகை. எலும்பு போன்றவர் ஈசன். ரத்தமும் சதையும் இருந்தால்தான் உடம்புக்கு அழகு எலும்பு மட்டும் இருந்தால் பார்க்கவே சகிக்காது. சிவனைவிடச் சக்திக்கு ஒன்பது மடங்கு அதிகப் பெருமை என்று தெரிகிறது. இதனால்தானோ என்னவோ சிவனுடைய வழிபாட்டைச் சிவராத்திரி என்ற ஒரே இரவில் நடத்திவிட்டு நவராத்திரி அன்று சக்தி வழிபாட்டை ஒன்பது இரவுகளில் கொண்டாடுகிறார்கள்.''

சண்மதப் பிரதித் தாபகரான சங்கராச்சாரியர் தமது இராஜராஜேசுவரி அட்டகத்திலே 'அந்தி ஈச மோட்சப் ரதா' என்ற சோற்றொடரால் சக்தியைப் போற்றுவர். இதற்கு, வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகள் கூறும் விளக்கம்: ''அந்தி—பலபல பிறவிகளில் பலபல தேவர்

களை வழிபட்டு அதன் புண்ணிய வசத்தால் தேவியை வழிபடும் அடியார்களுக்கு அப்பிறப்பே முடிவாகி அப்பிறவியின் முடிவிலேயே ஈசமோட்சப்ரதா—சிவபத முக்தியை அருளுபவள் பராசக்தி என்பதே இவ்வாக்கியத்தின் தெளிவான கருத்தாகும்.''

இத்தகைய சக்தி ஒன்பது பேதங்களாக ஒன்பது சக்திகளாக உருக்கொள்வாள். இவளுக்குப் பதினெட்டு மூர்த்தி பேதங்கள் கற்பிக்கப்படும். இவளின் வழிபாடு பற்றிக் கூறும ஆகமங்கள் தந்திரங்கள் எனப்படும் கேட்டதெல்லாம் மட்டுமன்றிக் கேளாதவற்றையும் தேவை உணர்ந்து அருள்பவள் தாயாகிய பராசக்தி. வரலட்சுமி விரதம். கேதார கௌரி விரதம். நவராத்திரி விரதம் ஆகியன அவளை நினைந்து அனுட்டித்தற்குரிய விரதங்கள்.

பாரதியின் சக்திப் பாட்டுக்கள்

தமிழிலே சக்தியின் பெருமையைப் பாடாத பத்தர்கள் இலர் இவ்வாறு பாடியவருள்ளே அபிராமிப்பட்டர் முக்கியமானவர். சக்தியின் பெருமையை, உண்மையை, தத்துவத்தை இவர் மிகவிரிவாக, அழகாகத் தமது 'அபிராமி அந்தாதி' என்ற நூலிலே பாடியுள்ளார். எமது காலத்திலே சக்தியை உபாசனை புரிந்து, சகலமும் சக்தியின் ஆடலே என்று உணர்ந்து அவ்வுணர்விற்கு உன்னத வடிவம் அமைதுக் கவிதையாய் உலாவவிட்டவர் மகாகவி பாரதியார். இந்து மத தத்துவங்களையெல்லாம் ஆழமாகக் கற்று அவற்றிலே தெளிவுபெற்று அந்தத் தெளிவின் பயனாகத் தெய்வ இசை இசைத்த கவிக்குயில் பாரதியின் பூரண ஆளுமையையும் புலப்படுத்துவன அவரின் சக்திப் பாடல்களே எனலாம்.

இத்தகைய பாடல்களைக் கல்வியங்காட்டுச் சைவ குலத்தின் விளக்காய் வாழ்ந்து இறை பாதங்களை அணைந்த திருவாட்டி உமையவல்லி சேதுராசா அவர்களின் நினைவு மலரிலே தொகுத்து வெளியிட வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மகிழ்கிறேன். பாரதி நூற்றாண்டுவிழாக் கொண்டாடப்படும் இவ்வாண்டிலே இந்நினைவு மலரை வெளியிடுதல் சாலப்பொருந்துவதே. இவ்வாய்ப்பினை எனக்களித்த திருவாட்டி உமையவல்லி சேதுராசா அவர்களின் குடும்பத்தினருக்கு என்இதயங்கனிந்த நன்றி உரியது.

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

'வாணி'
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
82-04-22

பாரதியின் சக்திப் பாடல்கள்

போற்றி அகவல்

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்
மாற்றுவாய், துடைப்பாய், வளர்ப்பாய், காப்பாய்
கனியிலே சுவையும் காற்றிலே இயக்கமும்
கலந்தாற் போலநீ அனைத்திலும் கலந்தாய்
உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி!
அன்னை, போற்றி! அமுதமே போற்றி!
புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்,
உயிரிலே உயிராய், இறப்பிலும் உயிராய்,
உண்டெனும் பொருளில் உண்மையாய், என்னுளே
நானெனும் பொருளாய் நானையே பெருக்கித்
தானென மாற்றுஞ் சாகாச் சுடராய்க்
கவலைநோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்ப்
பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்,
யானென தின்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்ச்
செய்கையாய், ஊக்கமாய்ச், சித்தமாய், அறிவாய்
நின்றிடுந் தாயே, நித்தமும் போற்றி!
இன்பங் கேட்டேன் ஈவாய் போற்றி!
துன்பம் வேண்டேன், துடைப்பாய் போற்றி!
அமுதங் கேட்டேன், அளிப்பாய் போற்றி!
சக்தி, போற்றி! தாயே, போற்றி!
முக்தி, போற்றி! மோனமே போற்றி!
சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி!

சிவசக்தி

1 இயற்கையென் றுனையுரைப்பார்—சிலர்
இணங்கும்ஐம் பூதங்கள் என்றிசைப்பார்;
செயற்கையின் சக்தியென்பார்—உயிர்த்
தீயென்பார், அறிவென்பார், ஈசனென்பார்
வியப்புறு தாய்நினக்கே—இங்கு
வேள்விசெய் திடுமெங்கள் 'ஓம்' என்னும்
நயப்படு மதுவுண்டே—சிவ
நாட்டியங் காட்டிநல் லருள்புரிவாய்;

2 அன்புறு சோதியென்பார்—சிலர்
ஆரிருட் காளியென் றுனைப்புகழ்வார்,
இன்பமென் றுரைத்திடுவார்—சிலர்
எண்ணருந் துன்பமென் றுனையிசைப்பார்
புன்பலி கொண்டுவந்தோம்—அருள்
பூண்டெமைத் தேவர்தங் குலத்திடுவாய்
மின்படு சிவசக்தி எங்கள்
வீரை! நின் திருவடி சரண்புகுந்தோம்.

3 உண்மயில் அமுதாவாய்—புண்கள்
ஒழித்திடு வாய்காளி! உதவிடுவாய்,
வண்மைகொள் உயிர்ச்சுடராய்—இங்கு
வளர்ந்திடு வாய்என்றும் மாய்வதிலாய்,
ஒண்மையும் ஊக்கமுந்தான்—என்றும்
ஊறிடுந் திருவருட் சுனையாவாய்
அண்மையில் என்றும் நின்றே—எம்மை
ஆதரித் தருள்செய்யும் விரதமுற்றாய்.

4 தெளிவுறும் அறிவினைநாம்—கொண்டு
சேர்த்தனம், நினைக்கது சோமரசம்
ஒளியுறும் உயிர்ச்செடியில்—இதை
ஓங்கிடு மதிவலி தனிற்பிழிந்தோம்,
களியுறக் குடித்திடுவாய்—நின்றன்
களிநடங் காண்பதற் குளங்கனிந்தோம்,
குளிர்சுவைப் பாட்டிசைத்தே—சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம்.

5 அச்சமும் துயரும் என்றே—இரண்டு
அசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்து நின்றார்
துச்சமிங் கிவர் படைகள்—பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்
இச்சையுற் றிவரடைந்தார்—எங்கள்
இன்னமு தைக்கவர்ந் தேகிடவே,
பிச்சையிங் கெமக்களித்தாய்—ஒரு
பெருநகர் உடலெனும் பெயரினதாம்.

6 கோடிமண் டபந்திகழும்—திறற்
கோட்டையிங் கிதையவர் பொழுதனைத்தும்
நாடிநின் றிடர்புரிவார்—உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார் ;
சாடுபல் குண்டுகளால்—ஒளி
சார்மதிற் கூடங்கள் தகர்த்திடுவார் ;
பாடிநின் றுனைப்புகழ்வோம்—எங்கள்
பகைவரை அழித்தெமைக் காத்திடுவாய்.

7 நின்னருள் வேண்டுகின்றோம்—எங்கள்
நீதியும் தர்மமும் நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும்—எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்.
அன்னநல் லணிவயல்கள்—எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே—அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்.

8 எம்முயி ராசைகளும்—எங்கள்
இச்சைகளும் செயல்களும்—துணிவுகளும்
செம்மையுற் றிடஅருள்வாய்—நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்துவிட்டோம்
மும்மையின் உடைமைகளும்—திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்.
அம்மை நற் சிவசக்தி—எமை
அமரர்தம் நிலையினில் ஆக்கிடுவாய்.

காணி நிலம் வேண்டும்

1 காணி நிலம் வேண்டும்—பராசக்தி
காணி நிலம் வேண்டும்—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேணும்;—அங்கு
கேணி யருகினிலே—தென்னைமரம்
கீற்று மிளநீரும்,

2 பத்துப் பன்னிரண்டு—தென்னைமரமங்கு
பக்கத்திலே வேணும்—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலாவொளி
முன்பு வரவேணும்—அங்கு
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற் படவேணும்—என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3 பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்—அந்தக்
காட்டு வெளியினிலே—அம்மா! நின்றன்
காவலுவ வேணும்—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

நல்லதோர் வீணை

1 நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?
சொல்லடி, சிவசக்தி—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ—இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி, சிவசக்தி !—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ ?

2 விசையுறு பந்தினைப்போல்—உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்;
நசையறு மனங்கேட்டேன்—நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்.
தசையினைத் தீசுடினும்—சிவ
சக்தியைப் பாடும்நல் லகங்கேட்டேன்.
அசைவறு மதிகேட்டேன்—இவை
அருள்வதில் உனக்கேதுந் தடையுளதோ ?

மகாசக்திக்கு விண்ணப்பம்

மோகத்தைக் கொன்றுவிடு—
அல்லா லென்றன் மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு—
அல்லா லதில் சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு—
அல்லா லென்றன் ஊனைச் சிதைத்துவிடு;
ஏகத் திருத்துலகம்—
இங்குள்ளன யாவையும் செய்பவளே! 1

பந்தத்தை நீக்கிவிடு—
அல்லா லுயிர்ப் பாரத்தைப் போக்கிவிடு;
சிந்தை தெளிவாக்கு—
அல்லா லிதைச் செத்த வுடலாக்கு;
இந்தப் பதர்களையே—
நெல்லாமென எண்ணி இருப்பேனோ?
எந்தப் பொருளிலுமே—
உள்ளே நின்று இயங்கி யிருப்பவளே. 2

உள்ளம் குளிராதோ?—
பொய்யாணவ ஊனம் ஒழியாதோ?
கள்ளம் உருகாதோ?—அம்மா
பக்திக் கண்ணீர் பெருகாதோ
வெள்ளைக் கருணையிலே—
இந்நாய்சிறு வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே—
அனைத்திலும் மேவியிருப்பவளே! 3

அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசிந்திடல் வேண்டும் அன்னாய்!

பூலோக குமாரி

பல்லவி

பூலோக குமாரி ஹே அம்ருத நாரி

அநுபல்லவி

ஆலோக ஸ்ருங்காரி அம்ருத கலச குச பாரே
கால பய குடாரி காம வாரி கனக லதா ரூப கர்வ திமிராரே

சரணம்

பாலே ரஸ ஜாலே பகவதி ப்ரஸீத காலே
நீல ரத்ன மய நேத்ர விசாலே நித்ய யுவதி பத நீரஜ மாலே—
லீலா ஜ்வாலா நிர்மித வாணீ நிரந்தரே நிகில லோகேசா நி
நிருபம ஸுந்தரி நித்ய கல்யாணி நிஜம் மாம் குரு ஹே
மன்மத ராணி.

மகாசக்தி வெண்பா

1. தன்னை மறந்து சகல உலகினையும்
மன்னிநிதங் காக்கும் மகாசக்தி—அன்னை
அவளே துணையென் றனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்.

2. நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி,
அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை,—தஞ்சமென்றே
வையமெலாங் காக்கும் மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு.

3. வையகத்துக் கில்லை, மனமே! நினக்கு நலஞ்
செய்யக் கருதியிவை செப்புவேன்—பொய்யில்லை'
எல்லாம் புரக்கும் இறைநமையுங் காக்குமென்ற
சொல்லால் அழியும் துயர்.

4. எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம்—பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறுண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு.

ஓம் சக்தி

1. நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
        நிறைந்த சுடர்மணிப் பூண்.
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம், இவள்
        பார்வைக்கு நேர்ப்பெருந்தீ,
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
        வையக மாந்த ரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர், சக்தி
        ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்.

2. நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
        நலத்தை நமக்கிழைப் பாள்,
அல்லது நீங்கும்என் றேயுலகேழும்
        அறைந்திடு வாய், முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு
        சொல்லு மவர் தமையே.
அல்லல் கெடுத்தம ரர்க்கிணை யாக்கிடும்
        ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்.

3, நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
        நாமின்று நம்பி விட்டோம்
கும்பிட் டெந்நேரமும் ''சக்தி'' யென்றேயுனைக்
        கும்பிடு வேன். மனமே!
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
        அச்ச மில்லாத படி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
        ஓம் சக்தி, ஓம் சக்தி ஓம்.

4. பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு
போற்றி உனக்கிசைத் தோம்,
அன்னை பராசக்தி என்றுரைத் தோம். தளை
அத்தனை யும்களைந் தோம்.
சொன்ன படிக்கு நடந்திடு வாய், மன
மே, தொழில் வேறில்லை காண்.
இன்னும் தேயுரைப் போம், சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்.

5. வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடு வாய்!
விள்ளு கலைத்தமிழ் வாணி! நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடு வேன்;
எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி
இரா தென்றன் நாவினிலே
வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல், சக்தி
வேல் சக்தி வேல், சக்தி வேல்!

பராசக்தி

1. கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்,
காவி யம்பல நீண்டன கட்டென்பார்,
விதவி தப்படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளை மேவென்பார்,
இதய மோளனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுதல் அன்றியே.

2. நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென்றொரு தெய்வங் கூறுமே;
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனுமோர் தெய்வம்,
பண்ணில் இன்பமுங் கற்பனை விந்தையும்
கூட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே.

3. நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்
பண்ணி லேகளி கூட்டவும் வேண்டிநான்
மூட்டு மன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதி லெலாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள்.

4. மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானி ருண்டு கருப்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்,
ஈரவாடை இரைந்தொலி செய்யவும்
உழையெ லாம்இடை யின்றியிவ் வானநீர்
ஊற்றுஞ் செய்தி உரைத்திட வேண்டுங்கால்
மழையுங் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்க தாய் என்று பாடுமென் வாணியே.

5. சொல்லி னுக்கெளி தாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாள்,
அல்லி னுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங்கண்டார்
கல்லி னுக்குள் அறிவொளி காணுங்கால்.
கால வெள்ளத் திலேநிலை காணுங்கால்,
புல்லி னில்வயி ரப்படை காணுங்கால்,
பூத லத்தில் பராசக்தி தோன்றுமே!

சக்திக் கூத்து

ராகம் — பியாக்

பல்லவி

தகத்தகத்தகத் தகதகவென் ருடோமோ? — சிவ
சக்திசக்தி சக்தியென்று பாடோமோ? (தகத்)

சரணங்கள்

1. அகத்தகத் தகத்தினிலே உள்நின்ருள்—அவள்
அம்மை யம்மை எம்மைநாடு பொய்வென்ருள்
தகத்தக நமக்கருள் புரிவாள் தாளொன்றே
சரண மென்று வாழ்த்திடுவோம் நாமின்றே. (தகத்)

2. புகப்புகப் புகவின் பமடர் போதெல்லாம்
புறத்தினிலே தள்ளிடுவாய் சூதெல்லாம்
குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோலே—அது
குழந்தைதன் தாயடிக்கீழ் சேய்போலே. (தகத்)

3. மிகத்தகைப்படு களியினிலே மெய்சோர—உள
வீரம்வந்து சோர்வை வென்று கைதேர
சகத்தினிலுள்ள மனிதரெல்லாம் நன்றுநன் றென—நாம்
சதிருடனே தாளம்இசை இரண்டுமொன்றென
(தகத்)

4. இந்திரனு ருலகினிலே நல்லின்பம்
இருக்குதென்பார் அதனை யிங்கே கொண்டெய்தி,
மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்—நல்ல
மதமுறவே அமுதநிலை கண்டெய்தித் (தகத்)

சக்தி

1. துன்ப மிலாத நிலையே சக்தி,
தூக்கமிலாக்கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி,
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி,
எண்ணத் திருக்கும் எரியேசக்தி,
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி,
முக்தி நிலையின் முடிவே சக்தி

2. சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி,
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி,
தீம்பழந் தன்னிற் சுவையே சக்தி,
தெய்வத்தை எண்ணும் நினைவே சக்தி.
பாம்பை அடிக்கும் படையே சக்தி,
பாட்டினில் வந்த களியே சக்தி,
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கரன் அன்புத் தழலே சக்தி.

3. வாழ்வு பெருக்கும் மதியே சக்தி,
மாநிலம் காக்கும் மதியே சக்தி,
தாழ்வு தடுக்குஞ் சதுரே சக்தி,
சஞ்சலம் நீக்குந் தவமே சக்தி,
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி,
விண்ணை யளக்கும் விரிவே சக்தி,
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி,
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

வையம் முழுவதும்

கண்ணிகள்

1 வையம் முழுதும் படைத்தளிக் கின்ற
மகாசக்தி தன்புகழ் வாழ்த்து கின்றோம்,
செய்யும் வினைகள் அனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே

2 பூதங்கள் ஐந்தில் இருந்தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்,
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே.

3 வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவு கின்றோம்
ஏக நிலையில் இருக்கும் அமிர்தத்தை
யாங்கள் அறிந்திட வேண்டு மென்றே.

4 உயிரெனத் தோன்றி உணர்வுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்கவென்றே.

5 சித்தத்தி லேநின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்புகின்றோம்.
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே.

6 மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வையமிசை நித்தம் பாடு கின்றோம்.
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே,

7 ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி என்றுரை செய்திடுவோம்,
ஓம் சக்தி என்பவர் உண்மை கண்டார் சுடர்
ஒண்மைகொண்டார் உயிர் வண்மை கொண்டார்.

சக்தி விளக்கம்

1 ஆதி பரம்பொருளின் ஊக்கம்—அதை
அன்னை எனப்பணிதல் ஆக்கம்
சூதில்லை காணுமிந்த நாட்டீர்,—மற்றத்
தொல்லை மதங்கள் செய்யும் தூக்கம்

2 மூலப்பழம் பொருளின் நாட்டம்—இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்,
காலப் பெருங்களத்தின் மீதே—எங்கள்
காளி நடமுலகக் கூட்டம்.

3 காலை இளவெயிலின் காட்சி—அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி,
நீல விசும்பினிடை இரவில்—சுடர்
நேமி யனைத்துமவள் ஆட்சி

4 நாரண னென்று பழவேதம்—சொல்லும்
நாயகன் சக்திதிருப் பாதம்,
சேரத் தவம் புரிந்து பெறுவார்—இங்கு
செல்வம் அறிவு சிவபோதம்

5 ஆதி சிவனுடைய சக்தி—எங்கள்
அன்னை யருள்பெறுதல் முக்தி.
மீதி உயிரிருக்கும் போதே—அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி.

6. பண்டை விதியுடைய தேவி—வெள்ளைப்
பாரதி யன்னையருள் மேவி,
கண்ட பொருள் விளக்கும் நூல்கள்—பல
கற்றலில் லாதவனோர் பாவி,

7. மூர்த்திகள் மூன்று, பொருள் ஒன்று,—அந்த
மூலப் பொருள் ஒளியின் குன்று,
நேர்த்தி திகழும் அந்த ஒளியை எந்த
நேரமும் போற்று சக்தி என்று.

சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்

ராகம்—பூபாளம்] [தாளம்—சதுஸ்ர ஏகம்

1 கையைச், சக்தி தனக்கே கருவி யாக்கு—அது
சாதனைகள் யாவினையும் கூடும்—கையைச்
சக்தி தனக்கே கருவியாக்கு—அது
சக்தியுற்றுக் கல்லினையுஞ் சாடும்.

2 கண்ணைச், சக்தி தனக்கே கருவி யாக்கு—அது
சக்தி வழியினையும் காணும்—கண்ணைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு—அது
சத்தியமும் நல்லருளும் பூணும்.

3 செவி, சக்தி தனக்கே கருவி யாக்கு—சிவ
சக்தி சொல்லும் மொழியது கேட்கும்
—செவி
சக்தி தனக்கே கருவியாக்கு—அது
சக்திதிருப் பாடலினைக் கேட்கும்.

4 வாய், சக்தி தனக்கே கருவி யாக்கு—சிவ
சக்திபுக ழினையது முழங்கும்—வாய்
சக்தி தனக்கே கருவி யாக்கு—சிவ
சக்திநெறி யாவினையும் வழங்கும்

5 சிவ, சக்திதனை நாசி நித்தம் நுகரும்—அதைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு—சிவ
சக்திதிருச் சுவையினை நுகரும்—சிவ
சக்தி தனக்கே எமது நாக்கு

6 மெய்யைச், சக்தி தனக்கே கருவி யாக்கு — சிவ
சக்திதருந் திறனதி லேறும் — மெய்யைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சாதலற்ற வழியினைத் தேறும்.

7 கண்டம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சந்ததமும் நல்லமுதைப் பாடும் — கண்டம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்தியுடன் என்றும் உறவாடும்.

8 தோள், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
தாரணியும் மேலுலகுந் தாங்கும் — தோள்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்திபெற்று மேருவென ஓங்கும்

9 நெஞ்சம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்தியுற நித்தம் விரிவாகும் — நெஞ்சம்
சக்தி தனக்கே கருவியாக்கு — அதைத்
தாக்கவரும் வாளொதுங்கிப் போகும்.

10 சிவ, சக்தி தனக்கே எமது வயிறு — அது
சாம்பரையும் நல்லவுண வாக்கும் — சிவ
சக்தி தனக்கே எமது வயிறு — அது
சக்திபெற உடலினைக் காக்கும்.

11 இடை, சக்தி தனக்கே கருவி யாக்கு — நல்ல
சக்தியுள்ள சந்ததிகள் தோன்றும்—இடை
சக்தி தனக்கே கருவி யாக்கு — நின்றன்
சாதிமுற்றும் நல்லறத்தில் ஊன்றும்.

12 கால், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சாடியெழு கடலையுந் தாவும் — கால்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சஞ்சலமில் லாமலெங்கும் மேவும்.

13 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சஞ்சலங்கள் தீர்ந்தொருமை கூடும்—மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சாத்துவிகத் தன்மையினைச் சூடும்,

14 மனம், சக்தி தனக்கே கருவியாக்கு — அது
சக்தியற்ற சிந்தனைகள் தீரும் — மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அதில்
சாரும்நல்ல உறுதியும் சீரும்.

15 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்தி சக்தி சக்தியென்று பேசும் — மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அதில்
சார்ந்திருக்கும் நல்லுறவும் தேசும்;

16 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்தி நுட்பம் யாவினையும் நாடும் — மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்திசக்தி யென்றுகுதித் தாடும்

17 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சக்தியினை எத்திசையும் சேர்க்கும் — மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
தான் விரும்பில் மாமலையைப் பேர்க்கும்

18 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — அது
சந்ததமும் சக்திதனைச் சூழும் — மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு — அதில்
சாவுபெறும் தீவினையும் ஊழும்

19 மனம், சக்தி தனக்கே உரிமை யாக்கு — எதைத்
தான்விரும்பி னுலும்வந்து சேரும் — மனம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு — உடல்
தன்னிலுயர் சக்திவந்து சேரும்

20 மனம், சக்தி தனக்கே கருவியாக்கு — இந்தத்
தாரணியில் நூறுவய தாகும் — மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — உன்னைச்
சாரவந்த நோயழிந்து போகும்.

21 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — தோள்
சக்திபெற்று நல்லதொழில் செய்யும்—மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — எங்கும்
சக்தியருள் மாரிவந்து பெய்யும்.

22 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — சிவ
சக்தி நடையாவும் நன்கு பழகும் — மனம்
சக்தி தனக்கே கருவியாக்கு — முகம்
சார்ந்திருக்கும் நல்லருளும் — அழகும்.

23 மனம், சக்தி தனக்கே கருவி யாக்கு — உயர்
சாத்திரங்கள் யாவும்நன்குதெரியும்—மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு — நல்ல
சத்திய விளக்கு நித்தம் எரியும்.

24 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு — நல்ல
தாளவகை சந்தவகை காட்டும் — சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு — அதில்
சாரும்நல்ல வார்த்தைகளும் பாட்டும்.

25 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு — அது
சக்தியை யெல்லோர்க்கு முணர்வுறுத்தும்
— சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு — அது
சக்திபுகழ் திக்கனைத்தும் நிறுத்தும்.

26 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு — அது
சக்திசக்தி யென்றுகுழ லூதும் — சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு — அதில்
சார்வதில்லை அச்சமுடன் சூதும்.

27 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு—அது
சக்தியென்று வீணைதனில் பேசும்—சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு—அதில்
சக்திபரி மளமிங்கு வீசும்.

28 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு—அது
சக்தியென்று தாளமிட்டு முழங்கும்—சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு—அது
சஞ்சலங்கள் யாவினையும் அழிக்கும்.

29 சித்தம், சக்தி தனக்கே உரிமை யாக்கு—அது
சக்தி வந்து கோட்டைகட்டி வாழும்
—சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு—அது
சக்தியருட் சித்திரத்தில் ஆழும்.

30 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சங்கடங்கள் யாவினையும் உடைக்கும்—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அங்கு
சத்தியமும் நல்லறமும் கிடைக்கும்.

31 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சாரவரும் தீமைகளை விலக்கும்—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சஞ்சலப் பிசாசுகளைக் கலக்கும்.

32 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சக்தி செய்யும் விந்தைகளைத் தேடும்—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதி
சக்தியுறை விடங்களை நாடும்.

33 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
தர்க்க மெனுங் காட்டிலச்சம் நீங்கும்—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதில்
தள்ளி விடும் பொய்ந்நெறியும் தீங்கும்.

34 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதில்
சஞ்சலத்தின் தீயவிருள் விலகும்—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதில்
சக்தியொளி நித்தமுநின் றிலகும்.

35 மதி, சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதில்
சார்வதில்லை ஐயமெனும் பாம்பு—மதி
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அங்கு
தான்முளைக்கும் முக்திவிதைக் காம்பு.

36 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
தாரணியில் அன்பு நிலை நாட்டும்—மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
சர்வசிவ சக்தியினைக் காட்டும்.

37 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
சக்திதிரு வருளினைச் சேர்க்கும்—மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
தாமதப் பொய் தீமைகளைப் போக்கும்

38 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
சத்தியத்தின் வெல்கொடியை நாட்டும்—மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
தாக்கவரும் பொய்ப் புலியை ஓட்டும்.

39 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
சத்தியநல் லிரவியைக் காட்டும்—மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு—அதில்
சாரவரும் புயல்களை வாட்டும்.

40 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
சக்திவிர தத்தை யென்றும் பூணும்—மதி
சக்திவிர தத்தை யென்றுங் காத்தல்—சிவ
சக்திதரும் இன்பமும் நல்லூணும்.

41 மதி, சக்தி தனக்கே அடிமை யாக்கு—தெளி
தந்தமுதப் பொய்கையென ஒளிரும்—மதி
சக்தி தனக்கே அடிமை யாக்கு—இது
சந்ததமும் இன்பமுற மிளிரும்.

42 அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
தன்னையொரு சக்தியென்று தேரும்—அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
தாமதமும் ஆணவமும் தீரும்.

43 அகம், சக்தி தனக்கே அடிமை யாக்கு—அது
தன்னையவள் கோயிலென்று காணும்—அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
தன்னை யெண்ணித் துன்பமுற நாணும்.

44 அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சக்தியெனும் கடலிலோர் திவலை—அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு—சிவ
சக்தியுண்டு நமக்கில்லைக் கவலை.

45 அகம், சக்தி தனக்கே உடைமை யாக்கு—அதில்
சக்திசிவ நாதம் நித்தம் ஒலிக்கும்—அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு—அது
சக்திதிரு மேனியொளி ஜ்வலிக்கும்.

46 சிவ, சக்தி என்றும் வாழி! என்று பாடு—சிவ
சக்திசக்தி என்றுகுதித் தாடு—சிவ
சக்தி என்றும் வாழி! என்று பாடு—சிவ
சக்திசக்தி என்றுவிளை யாடு.

சக்தி திருப்புகழ்

சக்திசக்தி சக்தீ சக்தீ சக்தீ சக்தீ என்றோது ;
சக்திசக்தி சக்தீ என்பார்—சாகார் என்றே நின்றோது ;

சக்திசக்தி என்றே வாழ்தல்—சால்பாம் நம்மைச் சார்ந்தீரே!
சக்திசக்தி என்றீ ராகில்—சாகா உண்மை சேர்ந்தீரே!

சக்திசக்தி என்றால் சக்தி— தானே சேரும் கண்டீரே!
சக்திசக்தி என்றால் வெற்றி—தானே நேரும் கண்டீரே!

சக்திசக்தி என்றே செய்தால்—தானே செய்கை நேராகும்
சக்திசக்தி என்றால் அஃது—தானே முக்தி வேராகும்.

சக்திசக்தி சக்தீ சக்தீ சக்தீ என்றே ஆடோமோ ?
சக்திசக்தி சக்தீ யென்றே—தாளங் கொட்டிப் பாடோமோ?

சக்திசக்தி என்றால் துன்பம்—தானே தீரும் கண்டீரே!
சக்திசக்தி என்றால் இன்பம்—தானே சேரும் கண்டீரே!

சக்திசக்தி என்றால் செல்வம்—தானே ஊறும் கண்டீரோ!
சக்திசக்தி என்றால் கல்வி—தானே தேறும் கண்டீரோ!

சக்திசக்தி சக்தீ சக்தீ சக்தீ சக்தீ வாழி நீ!
சக்திசக்தி சக்தீ சக்தீ சக்தீ சக்தீ வாழி நீ!

சக்திசக்தி வாழீ என்றால்—சம்பத் தெல்லாம் நேராகும்;
சக்திசக்தி என்றால் சக்தி—தாசன் என்றே பேராகும்.

சிவசக்தி புகழ்

ராகம்—தன்யாசி] [தாளம்—சதுஸ்ர ஏகம்

1 ஓம், சக்திசக்தி சக்தியென்று சொல்லு—கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுஞ் கொல்லு
சக்திசக்தி சக்தியென்று சொல்லி—அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு

2 ஓம், சக்திமிசைப் பாடல்பல பாடு—ஓம்
சக்திசக்தி என்று தாளம் போடு;
சக்திதருஞ் செய்கைநிலந் தனிலே—சிவ
சக்திவெறி கொண்டுகளித் தாடு

3 ஓம், சக்திதனை யேசரணங் கொள்ளு—என்றும்
சாவினுக்கோ ரச்சமில்லைத் தள்ளு
சக்திபுக ழாமமுதை அள்ளு—மது
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு

4 ஓம், சக்திசெய்யும் புதுமைகள் பேசு—நல்ல
சக்தியற்ற பேடிகளை ஏசு
சக்திதிருக் கோயிலுள்ள மாக்கி—அவள்
தந்திடுநற் குங்குமத்தைப் பூசு

5 ஓம், சக்தியினைச் சேர்ந்ததிந்தச் செய்கை—இதைச்
சார்ந்து நிற்ப தேநமக்கோ ருய்கை
சக்தியெனும் இன்பமுள்ள பொய்கை—அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை

6 ஓம், சக்திசக்தி சக்தியென்று நாட்டு—சிவ
சக்தியருள் பூமிதனில் காட்டு
சக்திபெற்ற நல்லநிலை நிற்பார்—புவிச்
சாதிகளெல் லாமதனைக் கேட்டு

7 ஓம், சக்தி சக்தி யென்று முழங்கு—அவள்
தந்திரமெல் லாமுலகில் வழங்கு
சக்தியருள் கூடிவிடு மாயின்—உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு

8 ஓம், சக்தி செய்யுந் தொழில் எண்ணு—நித்தம்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால்—இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு

9 ஓம், சக்தியரு ளாலுலகில் ஏறு—ஒரு
சங்கடம் வந்தாலிரண்டு கூறு;
சக்திசில சோதனைகள் செய்தால்—அவள்
தண்ணருளென் றேமனது தேறு

10 ஓம், சக்திதுணை என்றுநம்பி வாழ்த்து—சிவ
சக்திதனையே அகத்தில் ஆழ்த்து;
சக்தியும் சிறப்புமிகப் பெறுவாய்—சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து.

பேதை நெஞ்சே

1 இன்னுமொரு முறைசொல்வேன், பேதை நெஞ்சே !
எதற்குமினி உளைவதிலே பயனொன் றில்லை
முன்னர்நம திச்சையினாற் பிறந்தோ மில்லை
முதலிறுதி இடைநமது வசத்தில் இல்லை
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்திற் பொருளெல்லாம் சலித்தல் கண்டாய்.
பின்னையொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்.

2 நினையாத விளைவெல்லாம் விளைந்து கூடி
நினைத்தபயன் காண்பதவள் செய்கை யன்றோ
மனமார உண்மையினைப் புரட்ட லாமோ
மஹாசக்தி செய்தநன்றி மறக்க லாமோ
எனையாளும் மாதேவி, வீரர் தேவி,
இமையவருந் தொழுந்தேவி, எல்லைத் தேவி,
மனைவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி,
மலரடியே துணையென்று வாழ்த்தாய் நெஞ்சே!

3 சக்தியென்று புகழ்ந்திடுவோம், முருகன் என்போம்;
சங்கரனென் றுரைத்திடுவோம் கண்ணன் என்போம்;
நித்தியமிங் கவள்சரணே நிலையென் றெண்ணி,
நினக்குள்ள குறைகளெல்லாந் தீர்க்கச் சொல்லிப்
பக்தியினாற் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி,
பசிபிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி,
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி,
உலகளந்த நாயகிதாள் உரைப்பாய், நெஞ்சே

4 செல்வங்கள் கேட்டால்நீ கொடுக்க வேண்டும்
சிறுமைகளென் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்,
கல்வியிலே மதியினைநீ தொடுக்க வேண்டும்;
கருணையினால் அகப்பேயைத் தொலைக்க வேண்டும்,
தொல்லைதரும் ஐயங்கள் தொலைக்க வேண்டும்,
துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே
நல்லவழி சேர்ப்பித்துக் காக்க வேண்டும்
'நமோநமஓம் சக்தி' யென நவிலாய் நெஞ்சே !

5 பாட்டினிலே சொல்லுவதும் அவள்சொல் லாகும்
பயனன்றி உரைப்பாளோ பாராய், நெஞ்சே!
கேட்டதுநீ பெற்றிடுவாய் ஐய மில்லைக்
கேடில்லைத், தெய்வமுண்டு, வெற்றி யுண்டு
மீட்டுமுனக் குரைத்திடுவேன்; ஆதி சக்தி,
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி
நாட்டினிலே சனகனைப்போல் நமையும் செய்தாள்
'நமோநம, ஓம் சக்தி'யென நவிலாய் நெஞ்சே

மஹா சக்தி

1 சந்திர னொளியில் அவளைக் கண்டேன்
சரண மென்று புகுந்து கொண்டேன்
இந்திரி யங்களை வென்று விட்டேன்
எனதென் ஆசையைக் கொன்று விட்டேன்,

2 பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரி லாதெனைச் செய்து விட்டாள்
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்,

3 மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்.
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள்

நவராத்திரிப் பாட்டு

(உஜ்ஜயினீ)

1 உஜ்ஜயினீ நித்ய கல்யாணீ!
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி (உஜ்ஜ)

2 உஜ்ஜய காரண சங்கர தேவீ
உமா சரஸ்வதீ ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜ)

3 வாழி புனைந்து மஹேசுவர தேவன்,
தோழி பதங்கள் பணிந்து துணிந்தனம். (உஜ்ஜ)

4 சத்ய யுகத்தை அகத்தி லிருத்தித்
திறத்தை நமக்கரு ளிச்செய்யும் உத்தமி (உஜ்ஜ)

காளிப்பாட்டு

யாதுமாகி நின்றாய்—காளி! எங்கும் நீநி றைந்தாய்.
தீது நன்மை யெல்லாம்—காளி! தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்தும் ஆனாய்—காளி! பொறிக ளைந்தும் ஆனாய்
போத மாகி நின்றாய்—காளி! பொறியை விஞ்சி நின்றாய்.

இன்ப மாகிவிட்டாய்-காளி! என்னு ளேபு குந்தாய்,
பின்பு நின்னை யல்லால்—காளி! பிறிது நானும் உண்டோ?
அன்ப ளித்து விட்டாய்-காளி! ஆண்மை தந்து விட்டாய்,
துன்பம் நீக்கி விட்டாய்—காளி! தொல்லை போக்கி விட்டாய்.

காளி ஸ்தோத்திரம்

யாது மாகி நின்றாய்—காளி !
எங்கும் நீநி றைந்தாய்:
தீது நன்மை யெல்லாம்—நின்றன்
செயல்க ளன்றி யில்லை.
போதும் இங்கு மாந்தர்—வாழும்
பொய்ம்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே !—என்மீ
தருள் புரிந்து காப்பாய். 1

எந்த நாளும் நின்மேல்—தாயே !
இசைகள் பாடி வாழ்வேன்,
கந்த னைப்ப யந்தாய்—தாயே !
கருணை வெள்ள மானாய்
மந்த மாரு தத்தில்—வானில்
மலையி னுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும்—அங்குன்
செம்மை தோன்று மன்றே 2

கர்ம யோக மொன்றே—உலகில்
காக்கு மென்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும்—இங்கே
தவற லென்ப தின்றி
மர்ம மான பொருளாம்—நின்றன்
மலர டிக்கண் நெஞ்சம்
செம்மை யுற்று நாளும்—சேர்ந்தே
தேசு கூட வேண்டும். 3

என்ற னுள்ள வெளியில்—ஞானத்
திரவி யேற வேண்டும்.
குன்ற மொத்த தோளும்—மேருக்
கோல மொத்த வடிவும்

நன்றை நாடு மனமும்—நீயெந்
நாளு மீதல் வேண்டும்;
ஒன்றை விட்டு மற்றோர்—துயரில்
உழலும் நெஞ்சம் வேண்டா. 4

வான கத்தி னொளியைக்—கண்டே
மனம கிழ்ச்சி பொங்கி,
யானெ தற்கும் அஞ்சேன்—ஆகி
எந்த நாளும் வாழ்வேன்,
ஞான மொத்த தம்மா—உவமை
நானு ரைக்கொ ணுதாம்
வான கத்தி னொளியின்—அழகை
வாழ்த்து மாறி யாதோ 5

ஞாயி றென்ற கோளம்—தருமோர்
நல்லபே ரொளிக்கே
தேய மீதோர் உவமை—எவரே
தேடி யோத வல்லார்
வாயி னிக்கும் அம்மா!—அழகாம்
மதியின் இன்ப ஒளியை
நேயமோ டுரைத்தால்—ஆங்கே
நெஞ்சி ளக்க மெய்தும். 6

காளி மீது நெஞ்சம்—என்றும்
கலந்து நிற்க வேண்டும்,
வேளை யொத்த விறலும்—பாரில்
வேந்தரேத்து புகழும்,
யாளி யொத்த வலியும்—என்றும்
இன்பம் நிற்கும் மனமும்
வாழி யிதல் வேண்டும்—அன்னய்
வாழ்க நின்றன் அருளே

யோக சித்தி

வரங்கேட்டல்

1 விண்ணும் மண்ணும் தனியாளும்—எங்கள்
வீரை சக்தி நினதருளே—என்றன்
கண்ணுங் கருத்தும் எனக்கொண்டு—அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி—நான்
பண்ணும் பூசனை கள்எல்லாம்—வெறும்
பாலை வனத்தில் இட்ட நீரோ—உனக்
கெண்ணுஞ் சிந்தை யொன்றிலையோ—அறி
வில்லா தகிலம் அளிப்பாயோ

2 நீயே சரணமென்று கூவி—என்றன்
நெஞ்சிற் பேருறுதி கொண்டு—அடி
தாயே எனக்குமிக நிதியும்—அறந்
தன்னைக் காக்குமொரு திறனும்—தரு
வாயே யென்றுபணிந் தேத்திப்—பல
வாறு நினதுபுகழ் பாடி—வாய்
ஓயே னவதுண ராயோ—நின
துண்மை தவறுவதோர் உலகோ ?

3 காளீ வலியசா முண்டி—ஓங்
காரத் தலைவியென் னிராணி—பல
நாளிங் கெனையலைக்க லாமோ—உள்ளம்
நாடும் பொருளடைதற் கன்றோ—மலர்த்
தாளில் விழுந்தபயங் கேட்டேன்—அது
தாரா யெனிலுயிரைத் தீராய்—துன்பம்
நீளில் உயிர்தரிக்க மாட்டேன்—கரு
நீலியென் னியல்பையறி யாயோ ?

4 தேடிச் சோறுநிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பினர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப்போலே—நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ

5 நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதியவுயி ராக்கி எனக்
கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

6 தோளை வலியுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டுபிளந் தாலும்—கட்டு
மாறா வுடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழுமுகம் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.

7 எண்ணுங் காரியங்க ளெல்லாம்—வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும்—தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும்—அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்—சுவை
நண்ணும் பாட்டினொடு தாளம்—மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை இன்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.

8 கல்லை வயிரமணி யாக்கல்—செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்—வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்—பன்றிப்
போத்தைச் சிங்கவே றுக்கல்—மண்ணை
வெல்லத் தினிப்புவரச் செய்தல்—என
விந்தை தோன்றிட இந்நாட்டை—நான்
தொல்லை தீர்த்துயர்வு கல்வி—வெற்றி
சூழும் வீரமறி வாண்மை.

9 கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள்—இவை
நாடும் படிக்குவினை செய்து—இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக்—கலி
சாடுந் திறனெனக்குத் தருவாய்—அடி
தாயே! உனக்கரிய துண்டோ?—மதி
மூடும் பொய்ம்மையிரு ளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும்.

10 ஐயந் தீர்த்துவிடல் வேண்டும்—புலை
அச்சம் போயொழிதல் வேண்டும்—பல
பையச் சொல்லுவதிங் கென்னே!—முன்னைப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா—எனை
உய்யக் கொண்டருள வேண்டும்—அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன்—இனி
வையத் தலைமையெனக் கருள்வாய்—அன்னை
வாழி! நின்னதருள் வாழி!
ஓம் காளீ! வலிய சாமுண்டி!
ஓங்காரத் தலைவி! என் இராணி!

மஹாசக்தி பஞ்சகம்

1 கரணமுந் தனுவும் நினக்கெனத் தந்தேன்
காளிநீ காத்தருள் செய்யே
மரணமும் அஞ்சேன்; நோய்களை அஞ்சேன்
மாரவெம் பேயினை அஞ்சேன்
இரணமுஞ் சுகமும், பழியுநற் புகழும்
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்;
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்
தாயெனைக் காத்தலுன் கடனே.

2 எண்ணிலாப் பொருளும், எல்லையில் வெளியும்
யாவுமா நின்றனை போற்றி
மண்ணிலார் வந்து வாழ்த்தினுஞ் செறினும்
மயங்கிலேன், மனமெனும் பெயர்கொள்
கண்ணிலாப் பேயை எள்ளுவேன் இனியெக்
காலுமே அமைதியி லிருப்பேன்
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகும்
தாயுனைச் சரண்புகுந் தேனால்

3 நீசருக் கினிதாந் தனத்தினும் மாதர்
நினைப்பினும் நெறியிலா மாக்கள்
மாசுறு பொய்ந்நட் பதனிலும் பன்னாள்
மயங்கினேன் அவையினி மதியேன்;
தேசுறு நீல நிறத்தினாள் அறிவாய்ச்
சிந்தையிற் குலவிடு திறத்தாள்
வீசுறுங் காற்றில் நெருப்பினில் வெளியில்
விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன்

4 ஐயமும் திகைப்புந் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது; சினமும்
பொய்யுமென் றினைய புன்மைக ளெல்லாம்
போயின உறுதிநான் கண்டேன்
வையமிங் கனைத்தும் ஆக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்ந்திடு தாயைத்
துய்யவெண் ணிறத்தாள் தனைக்கரி யவளைத்
துணையெனத் தொடர்ந்தது கொண்டே

5 தவத்தினை எளிதாப் புரிந்தனள் யோகத்
தனிநிலை எளிதெனப் புரிந்தாள்
சிவத்தினை இனிதாப் புரிந்தனள் மூடச்
சித்தமும் தெளிவுறச் செய்தாள்
பவத்தினை வெறுப்ப அருளினள் நானும்
பான்மைகொன் றவள்மயம் புரிந்தாள்,
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்,
அநந்தமா வாழ்கவிங் கவளே.

மஹாசக்தி வாழ்த்து

1 விண்டு ரைக்க அறிய அரியதாய்
விரிந்த வான வெளியென நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை,
அவற்றில் எண்ணற்ற வேகஞ் சமைத்தனை
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்,
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை,
கோலமே! நினைக் காளியென் றேத்துவேன்

2 நாடு காக்கும் அரசன் தனையந்த
நாட்டு ளோர்அர சென்றறி வார்எனில்
பாடு தண்டைக் குழந்தை தனக்கிதம்
பண்ணும் அப்பன் இவனென் றறிந்திடும்.
கோடியண்டம் இயக்கி யளிக்கும்நின்
கோலம் ஏழை குறித்திட லாகுமோ?
நாடி யிச்சிறு பூமியிற் காணுநின்
நலங்கள் ஏத்திட நல்லருள் செய்கவே

3 பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை
கரிய மேகத் திரளெனச் செல்லுவை
காலு மின்னென வந்துயிர் கொல்லுவை.
சொரியு நீரெனப் பல்லுயிர் போற்றுவை
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை
விரியுநீள்கட லென்ன நிறைந்தனை
வெல்க காளியென தம்மை வெல்கவே.

4 வாயு வாகி வெளியை அளந்தனை
வாழ்வெ தற்கும் உயர்நிலை ஆயினை
தேயு வாகி ஒளியருள் செய்குவை
செத்த வற்றைக் கருப்பொருள் ஆக்குவை
பாயு மாயிரஞ் சத்திக ளாகியே
பாரி லுள்ள தொழில்கள் இயற்றுவை
சாயும் பல்லுயிர் கொல்லுவை நிற்பன
தம்மைக் காத்துச் சுகம்பல நல்குவை

5 நிலத்தின் கீழ்பல் லுலோகங்கள் ஆயினை
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை
தலத்தின் மீது மலையும் நதிகளும்
சாருங் காடுஞ் சுனைகளும் ஆயினை
குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தாய் அம்மே!
போற்றி! போற்றி! நினதருள் போற்றியே!

6 சித்த சாகரஞ் செய்தனை ஆங்கதிற்
செய்த கர்மப் பயனெனப் பல்கினை
தத்து கின்ற திரையுஞ் சுழிகளும்
தாக்கி யெற்றிடுங் காற்றுமுள் ளோட்டமுஞ்
சுத்த மோனப் பகுதியும் வெண்பனி
சூழ்ந்த பாகமும் கட்டவெந் நீருமென்று
ஒத்த நீர்க்கடல் போலப் பலவகை
உள்ள மென்னுங் கடலில் அமைத்தனை.

ஊழிக் கூத்து

வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட — வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம் பாடப் — பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக் — களித்
தாடுங் காளீ! சாமுண்டீ! கங்காளீ!
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை நாடச்செய்தாய் என்னை.

ஐந்துறு பூதம் சிந்திப் போயொன்றாகப் — பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக — அங்கே
முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும் வேகத் — தோடே
முடியாநடனம் புரிவாய், அடுதீ சொரிவாய்!
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை நாடச்செய்தாய் என்னை.

பாழாம் வெளியும் பதறிப்போய்மெய் குலையச் — சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள் கலைய — அங்கே
ஊழாம் பேய்தான் ''ஓஹோ ஹோ'' வென்றலைய — வெறித்
துறுமித் திரிவாய் செருவங் கூத்தே புரிவாய்!
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை நாடச்செய்தாய் என்னை.

சக்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச் சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங் கொட்டி — அங்கே
எத்திக் கினிலும் நின்விழி யனல்போய் எட்டித் — தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்,
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை நாடச்செய்தாய் என்னை.

காலத் தொடுநிர் மூலம் படுமூ வுலகும் — அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும் — சிவன்
கோலங் கண்டுன் கனல் செய் சினமும் விலகும் — கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக் கூத் திடுவாய்!
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை நாடச் செய்தாய் என்னை.

காளிக்குச் சமர்ப்பணம்

இந்த மெய்யும் கரணமும் பொறியும்
இருபத்தேழு வருடங்கள் காத்தனன்
வந்தனம் அடி பேரருள் அன்னாய்!
வைர வீ! திறற் சாமுண்டி! காளி!
சிந்தனைதெளிந் தேனினி யுன்றன்
திருவ ருட்கென அர்ப்பணஞ் செய்தேன்;
வந்தி ருந்து பலபய னாகும்
வகைதெ ரிந்துகொள் வாழிய டி!நீ

காளி தருவாள்

1 எண்ணி லாத பொருட்குவை தானும்,
ஏற்ற மும்புவி யாட்சியும் ஆங்கே
விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும்
வெம்மை யும்பெருந் திண்மையும் அறிவும்,
தண்ணி லாவின் அமைதியும் அருளும்
தருவள் இன்றென தன்னை யென்காளி
மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்,
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்.

2 தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்
வானம் மூன்று மழைதரச் செய்வேன்
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்;
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்;
நான்வி ரும்பின காளித ருவாள்.

மகாகாளியின் புகழ்

ராகம்—ஆனந்தபைரவி] [தாளம்—ஆதி

காவடிச் சிந்து

1 காலமாம் வனத்திலண்டக் கோளமா மரத்தின்மீது
காளிசக்தி யென்றபெயர் கொண்டு—ரீங்
காரமிட் டுலவுமொரு வண்டு—தழல்
காலும்விழி நீலவன்னமூல அத்து வாக்களெனும்
கால்களா றுடையதெனக் கண்டு—மறை
காணுமுனி வோரு ரைத்தார் பண்டு
மேலுமாகிக் கீழுமாகி வேறுளதி சையுமாகி
விண்ணுமண்ணு மானசக்தி வெள்ளம்—இந்த
விந்தையெல்லா மாங்கதுசெய் கள்ளம்—பழ
வேதமா யதன்முனுள்ள நாதமாய் விளங்குமிந்த
வீரசக்தி வெள்ளம்விழும் பள்ளம்—ஆக
வேண்டும்நித்த மென்ற னேழை யுள்ளம்.

2 அன்புவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
ஆக்கநீக்கம் யாவுமவள் செய்கை—இதை
ஆர்ந்துணர்ந்த வர்களுக்குண் டுய்கை—அவள்
ஆதியா யநாதியா யகண்டவறி வாவளுன்றன்
அறிவுமவள் மேனியிலோர் சைகை—அவள்
ஆனந்தத்தி னெல்லை யற்ற பொய்கை.
இன்பவடி வாகிநிற்பள் துன்பெலா மவளிழைப்பள்
இஃதெலா மவள்புரியும் மாயை—அவள்
ஏதுமற்ற மெய்ப்பொருளின் சாயை...எனில்
எண்ணியேஓம் சக்தியெனும் புண்ணிய முனிவர் நித்தம்
எய்துவார்மெய்ஞ் ஞானமெனுந் தீயை—எரித்து
எற்றுவாரிந் நானெனும்பொய்ப் பேயை.

3 ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்குமுள வாகும்—ஒன்றே
யாகினு லுலகனைத்தும் சாரும்—அவை
யன்றியோர் பொருளுமில்லை அன்றியொன்று மில்லை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும்—இந்த
அறிவுதான் பரமஞான மாகும்.
நீதியா மரசுசெய்வர் நிதிகள்பல் கோடி துய்ப்பர்
நீண்டகாலம் வாழ் வர்தரை மீது—எந்த
நெறியுமெய்து வர்நினைத்த போது—அந்த
நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெருங் காளிபத
நீழலடைந் தார்க்கில்லையோர் தீது—என்றும்
நேர்மை வேதம் சொல்லும் வழியீது.

வெற்றி

1 எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றுங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாகு மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி
பாரில் வெற்றி எனக்குறு மாறே

2 எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனினும் வெற்றி
கண்ணு மாருயி ரும்மென நின்ருள்
காளித் தாயீங் கெனக்கருள் செய்தாள்.
மண்ணும் காற்றும் புனலும் அனலும்
வானும் வந்து வணங்கிநில் லாவோ
விண்ணு ளோர்பணிந் தேவல்செய் யாரோ
வெல்க காளி பதங்களென் பார்க்கே.

முத்துமாரி

1 உலகத்து நாயகியே —எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
உன் பாதம் சரண்புகுந்தோம்— எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
கலகத் தரக்கர்பலர்,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
கருத்தி னுள்ளே புகுந்துவிட்டார்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பலகற்றும் பலகேட்டும்,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
பயனொன்று மில்லையெடி,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
நிலையெங்கும் காணவில்லை.—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
நின்பாதம் சரண்புகுந்தோம்,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!

2 துணிவெளுக்க மண்ணுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
மனம்வெளுக்க வழியில்லை—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பிணிகளுக்கு மாற்றுண்டு—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
பேதைமைக்கு மாற்றில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
அணிகளுக்கோ ரெல்லையில்லாய்,—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரி!
அடைக்கலமிங் குனைப் புகுந்தோம் —எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

தேச முத்து மாரி

தேடியுனைச் சரணடைந்தேன், தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய், கேட்டவரந் தருவாய்

பாடியுனைச் சரணடைந்தேன், பாசமெலாங் களைவாய்
கோடிநலஞ் செய்திடுவாய், குறைகளெல்லாந் தீர்ப்பாய்

எப்பொழுதுங் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி
ஒப்பியுன தேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன்

சக்தி யென்று நேரமெல்லாந் தமிழ்க் கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்துந் தீரும்

ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்;
யாதானுந் தொழில் புரிவோம் யாதுமவள் தொழிலாம்.

துன்பமே இயற்கையெனும் சொல்லைமறந் திடுவோம்,
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்.

நம்பினோர் கெடுவதில்லை, நான்குமறைத் தீர்ப்பு;
அம்பி கையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

தனிப்பரம் பொருளே !

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோ கத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!

(பாரதியின் சுயசரிதை - 49)

ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம் — 4117/82